பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 06 சனிக்கிழமை (18-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 142

எடிசன் அக்கடமி
[யாழ் இந்து அருகில்]
K. K. S. வீதி, யாழ்.
O/L Day Class
பிரிவு 2
ஆரம்பம் : 21 — 4 — 92
8-00 மணி

எடிசன் அக்கடமி
[யாழ். இந்து அருகில்]
K. K. S. வீதி, யாழ்.
A/L 94
வர்த்தகமும் நிதியும்
By : சாம்ராஜ்
ஆரம்பம்: 21 — 4 — 92
2-30 மணி

# அரசாங்கத்தின் நிதி நிலைமை படுபயங்கரமான கட்டத்தில்!

## தருவிக்கப்படும் ஆயுதங்களுக்கு செலுத்தக்கூட பணம் இன்றி தவிப்பு!

கொழும்பு, ஏப்ரல் 18

அரசாங்கத்தின் நிதி நிலைமையும், பொருளாதாரமும் என்றுமில்லாதவாறு படுபயங்கரமான கட்டத்தை அடைந்திருக்கின்றன.

இராணுவத்தினருக்கு தருவிக்கப்படும் ஆயுதங்களுக்குத் தேவையான பணத்தைக் கூட வழங்க முடியாமல் திறைசேரி தவிக்கிறது. அதனால் ஆயுதங்கள் துறைமுகத்தில் வாரக் கணக்காக தேங்கிக் கிடக்கின்றன.

இப்போதுள்ள நிதி நிலைமையில் சம்பளம், ஓய்வூதியம் ஆகிய கொடுப்பனவுகளுக்குப் போதுமான பணம் மட்டுமே திறைசேரியில் உள்ளதாம். அதன் காரணமாக செலவினங்கள் எதுவாக இருந்தாலும் அதற்குத் திறைசேரியின் முன் அனுமதி பெறவேண்டும் என்று புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மூலதனம் சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு திட்டமிடல் கொள்கை அமுலாக்கல் அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும்.

★ திட்டமில்லாத செலவினங்கள்—

★ செலாவணியை ஈட்டித் தந்த தேயிலை, றப்பர், தைத்த ஆடைகள் போன்ற துறைகளில் வருமானவீழ்ச்சி—

★ வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு கூடுதல் நிதி செலவிடப்பட்டு வருவது—

★ வடக்கே விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் கொழும்பில் உள்ள பல வர்த்தக நிறுவனங்களுக்கு வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் அந்த நிறுவனங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவைகளைச் செலுத்தாமல் காலம் கடத்துகின்றன—

★ அகதிகளைப் பராமரிக்க அதிக பணம் செலவிடப்படுகிறது—

★ காங்கேசன்துறையில் சிமெந்து ஆலைகள் மூடப்பட்டதால், வெளிநாடுகளில் இருந்து சிமெந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அதனால் அந்நியச்செலாவணி இழப்பு—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் நேற்றும் தேடுதல் தீவிரம்!

கொழும்பு, ஏப். 18

கொழும்பில் நேற்றும் பல்வேறு இடங்களில் படையினர் பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உஷார்படுத்தப்பட்டிருந்தன.

வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டுள்ள வாகனங்களுடன் விடுதலைப் புலிகள் கொழும்பு நகருக்குள் பிரவேசித்திருப்பதாக ஸ்ரீலங்கா படை வட்டாரங்கள் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அதையடுத்தே கொழும்பில் தேடுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கிராமசேவையாளர் பதவி; போட்டிப் பரீட்சை மே 25ல்

யாழ்ப்பாணம், ஏப். 18

கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்காக அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

பரீட்சை ஆணையாளர் இத்தகவலை யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை இம்மாதம் 25ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [உ-3]

## நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் உணவு முத்திரை வழங்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஏப். 18

ஆரம்பத்தில் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்டவர்களுக்கு உடனடியாக அவற்றைத் திரும்பவும் வழங்குமாறு ஜனாதிபதி பிரேமதாசா பணித்திருக்கிறார்.

தற்போது நிலவும் வரட்சியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளை ஜனாதிபதி பிரேமதாசா நேரில் சென்று பார்வையிட்டார் என்றும், அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை இந்த உத்தரவை விடுத்தார் என்றும் அறிய வருகிறது.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில், இடம்பெயர்ந்ததால் உலர் உணவு நிவாரணம் பெறும் மக்களுக்கு உணவு முத்திரை ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. அதனால்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உதவி வைத்தியர்களுக்கு நியமனம் தருவதில் இழுபறி!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து 1990 ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியேறிய 18 உதவி வைத்திய அதிகாரிகளுக்கும் இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் சுகாதார அமைச்சுக்கும், வடக்கு-கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சுக்கும் இடையில் நிலவும் இழுபறி நிலையே நியமனம் வழங்கப்படாததற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆண்டு ஏப்ரல் மாதம் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களுக்கு 14 மாதங்களின் பின்னரே, மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பின் கீழ் உள்ளகப் பயிற்சிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

உள்ளகப் பயிற்சி இவ்வாண்டு ஜனவரியில் பூர்த்தியானது.

இந்த வைத்திய அதிகாரிகளுக்கு மாகாண சுகாதார அமைச்சு, மத்திய சுகாதார அமைச்சு ஆகிய இரண்டில் எது நியமனம் வழங்குவது என்ற இழுபறி நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் —

இதனால் நியமனம் வழங்கப்படுவது தாமதமாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## ஜி. சீ. ஈ. (உ. த) விசேட பரீட்சை: இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 18

1991 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சீ. ஈ [உயர்தர] விசேட பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன.

இந்த வினாத்தாள்களை பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வந்திருந்தனர்.

நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகன அணியில் பலாலிக்குச் சென்ற யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் அங்கு வைத்து வினாத்தாள்களைப் பொறுப்பேற்று, எடுத்து வந்தார்.

இந்தப் பரீட்சை இரண்டு கட்டங்களாக நடைபெறுவது தெரிந்ததே.

முதலாவது தொகுதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சீ-நோர் ஊழியர்களுக்கு 1 வருட சம்பளம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 18

சீ - நோர் நிறுவனத்தின் காரைநகர் மற்றும் குருநகர் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ஓராண்டு காலத்துக்கு சம்பளம் வழங்க கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் அமைச்சுச் செயலாளருடன் நடத்திய பேச்சுக்களின் போதே இந்த இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இந்த தொழிற்சாலைகள் செயலிழந்தன என்பது தெரிந்ததே.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் அட்டகாசம்

## மன்னார் முள்ளிக்குளத்தில் 21 வீடுகள் தீமூட்டி எரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 18

மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கிராமத்தை கடந்த சனிக்கிழமை பகல் சுற்றிவளைத்த படையினர் அங்கு 21 வீடுகளைத் தீமூட்டி எரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்குள்ள பொதுமக்கள் பலரையும் படையினர் கைது செய்துள்ளனர்.

கடல் மார்க்கமாகவும், காட்டு வழியாகவும் முன்னேறி முள்ளிக்குளம் கிராமத்தைச் சுற்றி வளைத்த படையினர், வீடுகளில் இருந்த மக்களை வெளியேற்றிவிட்டு, வீடுகளுக்கு தீவைத்து எரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கரை வலைகள், இரு வள்ளங்கள், ஒரு பிளாஸ்டிக் படகு, வெளிஇணைப்பு இயந்திரங்கள் ஆகியனவும் எரிந்து நாசமாகின.

அதேதினம் வவுனியா – மன்னார் வீதியில் உள்ள கிராமங்களை நோக்கி செட்டிகுளம் முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. [உ-3]

## முச்சந்தி முரளி



வரவு எட்டணா... செலவு பத்தணா... கடைசியில் துந்தணா...!

## பௌத்த குழு இன்று வருகை?

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பௌத்த குருமார் தூதுக்குழு ஒன்று இன்று சனிக்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை 'லங்காதீப' நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து பௌத்த குருமார் குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாடியிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பௌத்த குழுவின் விஜயம் குறித்த செய்தியை யாழ்ப்பாணத்தில் ஊர்ஜிதம் செய்துகொள்ள முடியவில்லை.

இதற்கிடையில்—

யாழ்ப்பாணம் வரவிருக்கும் பௌத்த குழுவினர் நேற்று மாலை கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருந்தனர் என்பது தெரிந்ததே.

அந்த மாநாடு பற்றிய செய்தியும் நேற்றிரவு இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. [உ-எ]

## ஆப்கானில் பெரும் நெருக்கடி

லண்டன், ஏப். 18

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து அங்கு பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும்—

அங்கு ஆட்சி எவர் கைக்குப் போகும் என்ற நிச்சயமற்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமக்கு எதிரான முஜாகுதீன் கெரில்லாக்களுடன் ஐ. நா. மேற்பார்வையின் கீழ் இணக்கத்துக்கு வர நஜிபுல்லா இணங்கியதை அடுத்து அவரது சகாக்களே அவரை பதவி கவிழ்த்ததாக தற்போது அறிவிக்கப்படுகிறது.

நஜிபுல்லாவின் அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்த அப்துல் வக்கீல் மற்றும் இராணுவத் தளபதிகள், அதிகாரிகள், நஜிபுல்லாவின் சில சகாக்கள் இணைந்து நஜிபுல்லாவின் ஆட்சியைக் கவிழ்த்து அரசைக் கைப்பற்றினர்; நான்கு பேர் கொண்ட இடைக்கால சபை ஒன்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 3 சீக்கிய தலைவர்கள் விடுதலை

புதுடில்லி, ஏப். 18

சிறைவைக்கப்பட்டிருந்த மூன்று முக்கிய சீக்கிய தீவிரவாதத் தலைவர்களான திரு. பிரகாஷ் சிங் பாதல், திரு. குருத் சரண்சிங் தோரா மற்றும் திரு. சிம்ரஞ்சித்சிங்மான் ஆகியோர் மாநில அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டார்கள். [உ]

## ஐ. நா. தூதரகத்தில் நஜிபுல்லா தஞ்சம்?

புதுடில்லி, ஏப். 18

பதவி கவிழ்க்கப்பட்ட ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா காபூலில் உள்ள ஐ. நா. தூதரகத்திற்குள் தஞ்சம் புகுந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் ஐ. நா. அதிகாரிகள் அதனை ஊர்ஜிதப் படுத்தவில்லை.

இதேவேளையில் புதுடில்லியில் தங்கியிருந்த நஜிபுல்லாவின் மனைவியும் அவரது மூன்று பெண் பிள்ளைகளும் இந்திய அதிகாரிகளினால் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதேபோன்று —

இந்தியாவில் ஆப்கான் தூதராக இருந்த நஜிபுல்லாவின் மைத்துனரும் இந்திய அதிகாரிகளினால் பாதுகாப்பான இடம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளே காரணமாம்!

கொழும்பு, ஏப். 18

அம்பாறையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-3]

## இலங்கையில் எய்ட்ஸுக்கு 13 பேர் பலி!

கொழும்பு, ஏப். 18

நாட்டில் கடந்த மூன்று மாதங்களில் புதிதாக எட்டு எயிட்ஸ் நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

சுமார் ஆயிரம் எய்ட்ஸ் வைரஸ் [எச். ஐ. வி] காவிகள் நாட்டில் உள்ளன என்றும்—

இதுவரை எய்ட்ஸ் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 என்றும் கொழும்பில் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [உ-எ]

## சத்ஜித்ரேக்கு தீவிர சிகிச்சை

புதுடில்லி, ஏப். 18

பிரபல திரைப்பட இயக்குநரும் அண்மையில் ஆஸ்கார் விருது பெற்றவருமான சத்யஜித்ரேயின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கல்கத்தா மருத்துவமனை ஒன்றில் திரு. ரேக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. [உ-எ]

## இரத்தம் அவசரம் தேவை!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் இரத்தத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க இரத்ததானம் செய்யுங்கள்!

பாலம் பொதுப் பணி மன்றத் தலைவர் அருட்திரு. ஆ. சிங்கராயர் பொதுமக்களிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

குறிப்பாக வெளியாவட்டங்களில் இருந்து வந்த நோயாளர்கள், உறவினர்கள் இங்கு இல்லாததால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்—

அவர்களுக்கு உதவுவதற்கு இரத்த தானம் செய்யுமாறும் அவர் விடுத்த பத்திரிகைக் குறிப்பின் மூலம் கோரியுள்ளார். [அ]

## ரூபவாஹினி சேவைகளும் குறைப்பு

கொழும்பு, ஏப். 18

மின்வெட்டு அமுலுக்கு வந்திருப்பதை அடுத்து ஸ்ரீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தனது ஒளிபரப்பு சேவைகளை மட்டுப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது அலைவரிசை சேவை, காலை 7 - 30 மணிக்கு இடம் பெறும் மறு ஒளிபரப்பு சேவை, வார இறுதி திரைப்பட ஒளிபரப்பு ஆகியவையே பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கின்றன. [உ]

## செய்திச் சரம்

### மின்சாரத்திற்கு தினசரி ஒரு கோடி ரூபா!

கொழும்பு, ஏப். 18

நீர்த்தேக்கங்களில் நீர் வற்றி வருவதால் நீர் மின்சார உற்பத்தி பெருமளவு வீழ்ச்சியடைந்திருப்பது தெரிந்ததே:

இதனையடுத்து எரிபொருள்களைப் பாவித்து இயந்திரங்களை இயக்கி, மின்சாரத்தை உற்பத்தி செய்ய மின்சார சபை முடிவு செய்திருக்கிறது:

இதன்படி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு தினசரி ஒரு கோடி ரூபா பெறுமதியான எரிபொருள் தேவை என்றும் சபை அறிவித்திருக்கிறது. [உ]

### புலமைப்பரிசில் பரீட்சை 26 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஏப். 18

1991 ஆம் ஆண்டுக்குரிய 5 ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன.

1991 ஆம் ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டிய இந்தப் பரீட்சை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற முடியாமல் போனது தெரிந்ததே.

### இறைச்சிக் கடைகள் நாளை மூடப்படும்

குருநகர், ஏப். 18

நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல இறைச்சிக்கடைகளும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் சகல இறைச்சிக் கடைகளையும் மூடி, அன்னை பூபதி நினைவாக நடைபெறும் உண்ணாவிரதம் மற்றும் அஞ்சலிக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்க செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் இறைச்சிக் கடை வியாபாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். [உ-51]

### பொது அறிவு தேர்வு முடிவு

அன்னை பூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் நடத்திய பொது அறிவுத் தேர்வின் முடிவுகள் அன்னை பூபதியின் நினைவு தினமான நாளை வெளிவர விருக்கின்றன.

இத்தேர்வில் உயர் "அ" பிரிவில் சித்தியடைந்தோருக்கு நாளை மாவட்டங்கள் தோறும் நிகழும் அன்னை பூபதி நினைவு நாள் நிகழ்ச்சியின்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும்—

சித்தியடைந்த ஏனைய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் மாணவர் இயக்கச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன கொமோறி (Komouri) கலப்பு பாலாடு 3 மாத அழகிய மறிக்குட்டியுடன் விவரம் இராசசிங்கம், தபாற்கந்தோர் ஒழுங்கை, உரும்பராய். [20612]

அல்சேஷன் பெண் நாய் (இரண்டு வருடங்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. தில்லைராசா இல. 55, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம். [20614]

தூய வெள்ளை, மஞ்சள் நிறங்களை உடைய Rediyes Love Birds அவற்றுடன் ஆண் மயில் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு க. மனோ, 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ். நகர். [4666]

அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. ச. தர்மகுலசிங்கம், கலா சாலை வீதி, திருநெல்வேலி. [20472]

## திருமண சேவை

உங்கள் தகுதிக்கு ஏற்ப மணமக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தொடர்பு: பொ. மோகன், ஸ்ரீராம் திருமண சேவை, புலோலி மேற்கு - மாயக்கை, பருத்தித்துறை. [20604]

## அம்பாள் திருமண சேவை

Doctors, Engineers, Lecturers, பட்டதாரி ஆசிரியர் ஆகியோருக்கு மணமக்கள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [20609]

## தவறிவிட்டது

க்ணேசரத்தினம் மணிவண்ணன் ஆகிய எனது கைச் சங்கிலி சுன்னாகம் ஸ்ரேசனுக்கும், காங்கேசன்துறை றோட் சைம்பியன் லேன் மாத்தனை கோயிலுக்கும் இடையில் 16-4-92 காலை 9 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சுன்னாகம் காவல்துறையினரிடம் தொடர்பு கொள்ளவும். [20607]

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை 18-4-92 சனியும், ஆண்டு 5 (1992) 19-4-92 ஞாயிறும், மு. ப. 7-00 மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20500]

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes. 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/1888]

## செவ்வாய் மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. 27-4-92 செவ்வாய் மாற்றத்தால் வரட்சி, வெப்பம், குண்டு வெடிப்புக்கள் தணியும், மழையும் உண்டு. முப்படைகளின் தாக்குதல்கள் பிசுபிசுக்கும். மீண்டும் அமைதி. சோபிதா. ரகுநாதன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். [பேராசிரியர் சத்தியதாஸன்] விலை ரூ. 7/- [4667]

## THE SPORTS STAR

பங்குனி மாத 21 ஆம், 28 ஆம் திகதிகளுக்குரிய World Cup Sports Star சஞ்சிகை விற்பனையாகின்றது. தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-1884]

## A/L 92 வினாத்தாள்

A/L 92 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைப் பகுதி, Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4650]

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 94 கலை, வர்த்தக வகுப்புகள்**

ஆரம்பம்: 18-04-1992 (சனி) 3 மணி.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | உதயன் |
| கணக்கியல் | — | ஶ்ரீ |
| வர்த். - நிதியும் | — | தேவா |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| புவியியல் | — | வேலா |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | சோதி |
| அரசியல் | — | நவம் |
| வரலாறு | — | பிள்ளை |

-நிர்வாகி.

(சி-1875)

## சுன்னாகம்

ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட

**அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பில் தெரிவான பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்கள் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | — 1404 | 6 ஆம் பரிசு | — 1469 |
| 2ஆம் பரிசு | — 735 | 7ஆம் பரிசு | — 863 |
| 3ஆம் பரிசு | — 43 | 8 ஆம் பரிசு | — 2029 |
| 4ஆம் பரிசு | — 674 | 9ஆம் பரிசு | — 1508 |
| 5ஆம் பரிசு | — 1537 | 10ஆம் பரிசு | — 1669 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களையுடைய அதிர்ஷ்டசாலிகள் 26 04-1992 ஞாயிறன்று காலை 9 மணியிலிருந்து சுன்னாகம் கே. கே. எஸ். வீதி, 207ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கழகக் காரியாலயத்தில் உரிய ஆவணங்களைக் காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

— நிர்வாகிகள்.

[சி-1926]

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





பரமேஸ்வரி குருச்சந்திரன்
பிறப்பு: 10 — 03 — 1939
இறப்பு: 19 — 03 — 1992

குருச்சந்திரன் ரவிஷங்கர்
பிறப்பு: 02 — 04 — 1969
அழிப்பு: 14 — 06 — 1990

உன் செல்வனை நீ அறியாமலே அழித்தார் காக்க வேண்டியவன்!
நீயோ கன்றைக்காணாத பசுப்போல் துடித்து துன்புற்றாய்!
உன் ஆத்மாவையும், உடலையும் அழிக்கும் படி
படைத்தவனை வேண்டினாயோ!
இந்த நாட்டின் சகல சிகிச்சை மனையும்
உன் நோய்க்கு சிகிச்சை தர இயலவில்லை
எம்மால் உன்னைக் காக்க முடியவில்லையே என்று
வெதும்பி ஒடுங்கி நிற்கிறோம்
அழிப்பு எமது குடும்பத்துக்கு பழகின ஒன்று தான்!

அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், துயர் உற்றவர்களுக்கும் எமது இதய நன்றி.

அந்தியேட்டி இன்று [18 - 04 - 1992] திருவையில் நடைபெறும்.

தாய் கணவன், மகன், சகோதரங்கள்.

த. சிவலிங்கம்
நாவற்குழி.

[20479]

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

**A/L 94**

★ கலை, வர்த்தகம் வகுப்புகள் ★

ஆரம்பம்: 18 - 04 - 1992
சனி 3 மணி (மாலை)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | உதயன் |
| வர்த். நிதியும் | — | தேவா |
| கணக்கியல் | — | ராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| தமிழ் / இந்து நாகரிகம் | — | பாலா |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | கியூபேட் |

**A/L 94 விஞ்ஞான வகுப்புகள் 19-04-92இல் ஆரம்பமாகின்றன.**

[சி-1922]

## Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி
தற்போது
வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ புத்தாண்டை முன்னிட்டு ★

14% முதல் 25% வரை
விசேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

**பாட்டா** மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா.

[20324]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**லெப். கலைஞன் (நித்தியா)**

பாலசிங்கம் - பாஸ்கர் (மோகன்)

தாயின் மடியில்: 14 -- 09 — 1972
தாயக மண்ணில்: 05 — 03 — 1992

எம் மனை நிறைக்க வந்தவனே!
தமிழ்ப் பகை முடிக்கச் சென்றவனே - வரிப்
புலிப் படைக்குள் நின்றவனே - சினப்
பகையடக்கி வீழ்ந்தாயோ......?
ஆனையிறவிலே மீண்டாயே!
மணலாற்று மண்ணிலும் வென்றாயே
கட்டைக் காட்டினில் சரிந்தாயோ?
காலன் கதையினை முடித்தானோ - உன்
தேகம் முளையென விளையாதோ - எம்
தேசம் விடிவினில் திழையாதோ?

எம் அன்புச் செல்வத்தின் சோகநிகழ்வில் கலந்து கொண்டவர்கள், ஆறுதல் தந்தவர்கள், சகல ஒழுங்குகளையும் மேற் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்க அன்பர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், மேலும் சகல வழிகளிலும் உதவியவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இவரோடு வீரச்சாவை எய்திய லெப். வேந்தன், வீரபாண்டியன் இவர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

அத்துடன் இன்று [18-04-1992] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.

இத்தாவில் - பளை.

[20608]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

**கணக்கியல் S. K பிரபாகரன்**

ஆரம்பம்: 19 - 04 1992
சனி, ஞாயிறு 2 மணி

92 வினா - விடை வகுப்பு 2 - 3
93 புதிய பிரிவு 3 - 4
94 புதிய பிரிவு 4 - 5

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி-1882]

# ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் செ. சிவசுப்பிரமணியம்**

தோற்றம்: 16—12—1916
மறைவு: 30—04—1991

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ! அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே உங்களை இழந்தோம்; மனம் துடித்தோம். அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரோ! ஆண்டு ஒன்று உருண்டோடி விட்ட போதினிலும் உங்கள் ஆத்மா சாந்திக்காக எந்நாளும் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மகள்.

சேச் லேன்,
தாவடி, கொக்குவில்.

[4665]

# ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வி ஷாமந்தி பத்மநாதன்**

[யாழ். பல்கலைக்கழக வர்த்தகப் பிரிவு, 3ஆம் வருட மாணவி]

மண்ணில்: 29—09—1967
விண்ணில்: 30 04—1991

திதி: 18—04—1992

ஆண்டொன்று சென்று மறைந்தது,
ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
மலர்ந்து மணம் வீசும் வேளையிலே ஷாமந்தி-நீ
மானுடராக்கை நீக்கி பூஜை மலரானாயோ?
பல்கலைக் கழகம் சென்றாய் பல்கலையும் கற்று
பட்டதாரியாய் வருவாய் என்று பார்த்திருந்த
வேளை பார்த்து பரமன் பாதம் சென்றாயோ?
உன் உடல் எமைவிட்டுப் பிரிந்தாலும்
என்றும் எம் நெஞ்சில் அழியாது
உயிரோவியமாய் இருக்கின்றாய்.

உனை என்றும் மறவாத:
அன்பு அப்பா, சகோதரர்,
மைத்துனர், மாமாமார், மாமிமார்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

'திருமகால்',
கட்டுடை, மானிப்பாய்.

[20383]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## கிழக்கில் தேடி அழித்தல்!

யாழ்ப்பாணக் குடாநாடு மீது நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பெரிய எடுப்பிலான தாக்குதலை இப்போதைக்கு நிறுத்துவது என்பதும் —

கிழக்கில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி விடுதலைப் புலிகளை விரட்டி அல்லது ஒழித்துக் கட்டி மூன்று மாதங்களில் அப்பகுதியைத் "துப்புரவு" செய்துவிட்டு தேர்தல் நடத்த வகை செய்வது என்பதும் —

இராணுவத்தின் மிகப் பிந்திய முடிவுகளாகும். போரை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் படைகளின் கட்டமைப்பில் ஜனாதிபதி செய்த சில புதிய மாற்றங்களின் பின்னரே இந்தப் புதிய முடிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் யாழ்ப்பாணக் கடலேரி வற்றிய பின்னர் [அனேகமாக மே மாதத்தில்] குடாநாட்டின் மீதான தாக்குதலை ஆரம்பிக்க இராணுவ உயர் அதிகாரிகள் தயாராகி வருவதாக "ஏசியாவீக்" சஞ்சிகை கூறுகிறது.

இதற்கிடையில் இந்த மாதத்தில் இன்னும் ஒரு சில தினங்களில் வழமையான மத்திய மட்டத் தாக்குதல்கள் வடக்கில் நடக்கலாம் என்று கொழும்பில் பலமாகப் பேசப்படுகிறது. ஆனால் அது உறுதிப்படுத்தப்படாத தகவல்.

இந்த வேளை பார்த்து பௌத்த பிக்குமாரின் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வருவதற்கு முயற்சித்து வருகிறது.

வடக்கு - கிழக்கின் இராணுவ, அரசியல் சூழ்நிலை இவ்வாறு கலங்கிய நிலையில் இருக்கும் வேளை —

கிழக்கில் தமிழர்களைத் தேடி அழிக்கும் கொடுமையை அரசாங்கப் படைகள் தீவிரப்படுத்தி உள்ளன. கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது என்பதன் அர்த்தம் அங்கு தமிழர்களைத் தேடி அழிப்பதேயாகும் என்று நிரூபிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் பதினைந்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் தேடி அழிக்கப்பட்டுள்ளார்கள். அகதி முகாம்களில் இருக்கும் தமிழர்கள், காரணம் எதுவும் இன்றி விசாரணைக்கென்று அழைத்துச் சென்று கொல்லப்படுகிறார்கள்.

அது மட்டுமன்றி அகதி முகாம்களில் இருந்த பலரை பலவந்தமாகக் கூட்டிச் சென்று படை முகாம்களுக்கு அருகே குடியமரச் செய்கிறார்கள். தமிழர்களைக் கொண்டு கங்கணுக்கு மனித கேடயம் அமைக்கிறார்கள்!

அவ்வாறு குடியமர்க்கும் தமிழர்களைக் கொன்றுவிட்டு இராணுவ நடவடிக்கையின் போது இடையில் சிக்குண்டு மரணமானார்கள் என்று இலகுவாகப் பதிந்து விடுவதற்கான ஏற்பாடு அது.

விடுதலைப்புலிகளை மூன்று மாதங்களில் ஒழிப்பது என்பது தமிழர்களில் அரைவாசிப் பேரை கிழக்கில் அழித்து விடுவதே என்பதைப் படையினர் ஆரம்பத்திலேயே செய்து காட்டுகிறார்கள்!

கடந்த காலங்களிலும் புலிகளுடன் போராடுவதாகக் கூறி, அவர்களை அழிப்பதாகக் கூறி அரசாங்கப் படைகள் அப்பாவித் தமிழ் மக்களையே கொன்று குவித்தன. அதனையே இனியும் செய்யப் போகின்றன.

கிழக்கில் தாக்குதல் என்றாலும், வடக்கில் தாக்குதல் என்றாலும் படைகள் கொல்வது விடுதலைப் புலிகளை அல்ல; அப்பாவித் தமிழ் மக்களையே. புலிகளை வெல்வதற்காக அரசு முயற்சி செய்யும் போதெல்லாம் இறந்தொழிவது தமிழ் மக்களே. நிலைமை இப்படியிருக்க, தமிழர்களின் மனங்களை வெல்வதற்கு முயற்சிப்பதாக. அரச அரசியல்வாதிகள் மட்டுமன்றி இராணுவ அதிகாரிகள் கூடச் சொல்கிறார்கள்! படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன் கோவில் என்பது போல!!

★ அம்பாறையில்

## குண்டு வெடிப்புக்கு பாவித்த பஸ் குறித்து புதிய தகவல்

கொழும்பு, ஏப். 18

அம்பாறையில் குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட மினி பஸ் குறித்து அச்சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்திவரும் புலனாய்வாளர்களுக்கு புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றனவாம்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தெற்கில் பாதயாத்திரைக்கு ஆட்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட பஸ்ஸே, அம்பாறை குண்டு வெடிப்புக்கும் பயன்படுத்தப் பட்டதாம்!

மட்டக்களப்பைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை ஒன்றின் செயலாளர் அளித்த தீவிர உதவியோடு விடுதலைப் புலிகள் இந்த இரண்டு குண்டு வெடிப்புத் தாக்குதல்களை நடத்தினார்கள் என்று விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட சுதந்திரக் கட்சிக் கிளைச் செயலாளர் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் —

விடுதலைப் புலிகளின் பழுகாமம் பிரிவு இராணுவத் தலைவர் உட்பட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பிரிவைச் சேர்ந்த இரண்டு முக்கிய புள்ளிகள் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் என பொலீஸார் இனங்கண்டுள்ளனர் என்றும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. [உ-எ]

## தமிழகக் கரையோரத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

சென்னை, ஏப் 18

தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது; இரு மேலதிக சோதனை நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன — தஞ்சாவூர் பொலீஸ் சுப்பிரிண்டன் ராஜேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

புதுப்பட்டினம் கலனி, அம்மன் சத்திரம் ஆகிய இடங்களிலேயே புதிதாக நிரந்தர சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றார் அவர். [உ]

## மட்டக்களப்பு நகரில் மனித உரிமைகள் நிலையம்

சர்வதேச மன்னிப்புச்சபையின் பரிந்துரைக்கு இணங்க மனித உரிமைகள் பணியகத்தின் பிராந்திய நிலையங்கள் கண்டி, மாத்தறை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் பிரிட்டிஷ் உதவியுடன் அமைக்கப்படவுள்ளன.

மனித உரிமைகள் பணியகத்தலைவர் திரு ஜே. எப். ஏ. சூசா இத் தகவலை வெளியிட்டார்.

"பல முறைப்பாட்டுக்காரர் எமது கடிதத்துடன் திருப்தியடைகிறார்கள் இல்லை. அவர்கள் எம்மை நேரில் சந்தித்து தமது நிலையை விளக்க விரும்புகின்றார்கள். பிராந்திய நிலையங்கள் தூர இடங்களில் இருந்து வரும் மக்களின் சிரமங்களைக் குறைக்க உதவும்" — இப்படி திரு. சூசா மேலும் சொன்னார். [த-எ]

## நன்னீர் மீன் பிடிப்பை ஊக்குவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 18

படையினரின் நடவடிக்கைகளினால், கடற்றொழில் பாதிக்கப்பட்டிருப்பதால் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக நன்னீர் மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

அதன் ஒரு கட்டமாக இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்படும் மீன்களை பதப்படுத்தி விற்பனை செய்வதற்கும், கோழித் தீன் தயாரிப்பில் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நன்னீர் மீனை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை அறிவதற்காக மீன் விற்பனை தொடர்பான சந்தைத் தரவுகளும் திரட்டப்பட்டுள்ளன. [உ]

## யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக 38 பதவிகள்

யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு 38 புதிய பதவிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கை நெறிப்பகுதியில் 5 பதவிகளுக்கு நியமனம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது அத்துறையில் உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர் உட்பட ஐந்து பதவிகள் புதிதாக உருவாக்கப்படும்.

ஏனைய பதவிகள் கலை, விஞ்ஞான, விவசாய பீடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. [உ-3]

சனசமூக நிலைய

## நூலகங்களுக்கு நன்கொடை மாகாணசபை வழங்காது

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலைய நூலகங்களுக்கு வருடா வருடம் வழங்கப்படும் நன்கொடைப் பணம் நிறுத்தப்பட்டுள்ளதாக வடக்கு — கிழக்கு மாகாண சபை அறிவித்துள்ளது.

எனினும் உள்ளூராட்சி மன்றங்களும், பிரதேசசபைகளும் இணைந்து இந்த நூலகங்களுக்கான நிதியை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் மூலதனச் செலவுக்குத் தேவையான நிதி இனிமேல் மொத்தமாக மாகாண சபையால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-8]

## சோளன் காலத்து கல்வெட்டு

தமிழ் நாட்டில் உள்ள திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள மரக்கோணம் என்ற இடத்தில் தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையினால் ஆதித்தியசோளன் காலத்து கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயலில் உள்ள பாறையில் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு 1300 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்வெட்டில் [illegible] மரக்குன்றத்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. [இ-10]

## ராமதாஸ் கட்சி பிரமுகர் கைது

சென்னை, ஏப். 18

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியது என்ற முறைப்பாட்டின் பேரில் பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் அணித்தலைவர் கே.எம். ஷெரீப் புதுக்கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பாட்டாளி மக்கள் கட்சிப் பிரமுகர்களும் அதன் தலைவர் ராமதாஸும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருவது தெரிந்ததே. [உ-எ]

## மாணவருக்கு மூக்குக்கண்ணாடி

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கணிசமான எண்ணிக்கை மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்க "ரெட்பானா" நிறுவனம் முன்வந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் பார்வை குறைந்தவர்கள் என்ற வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும், கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்தையும் சமர்ப்பித்து மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## கப்பல் கூட்டுத்தாபனம் கம்பனியாகும்

கொழும்பு, ஏப். 18

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் தனியார் கம்பனியாக மாற்றப்படவிருக்கிறது. கப்பற் கூட்டுத்தாபனத் தலைவர் டி. ஜி. டபிள்யூ. விஜேசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

நட்டத்தில் இயங்கும் கப்பல்களை விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு வெளிநாட்டுக் கடன்களை அடைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். [உ]

## சிரமதானம்

தென்மராட்சி, ஏப். 18

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கிராமங்கள் தோறும் சிரமதான வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிராமங்கள் தோறும் வீதிகள் துப்புரவாக்கல், குளங்களை ஆழமாக்கும் வேலைகள் என்பன நடைபெற்று வருகின்றன. [த-11]

## மரக்கறி விலை ஏற்படுத்தும் ஆச்சரியம்

யாழ்ப்பாணம், ஏப். 18

கொழும்பில் இருந்து நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வருவர்களுக்கு இங்கு மரக்கறி விற்கப்படும் விலை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறதாம்.

புத்தாண்டு தினத்தை முன்விட்டு யாழ்ப்பாணம் வந்தவர்களுக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

கொழும்பில் ஒரு கிலோ கோவா 15 ரூபாவாகவும் ஒரு கிலோ சின்னவெங்காயம் 35 ரூபா முதல் 40 ரூபா வரை விற்கப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர். [இ-69]

## கள் உற்பத்தி வீழ்ச்சி

தெல்லிப்பழை, ஏப். 18

தற்போது நிலவும் கடும் வரட்சியால் கள் உற்பத்தி குறைந்துள்ளது. [இ-68]

## வாராந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 18

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் "எனது கலை இலக்கிய வாழ்க்கை" என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

கோண்டாவிலில் உள்ள கலை, பண்பாட்டுக்கழகத் [illegible] [இ]

## கொழும்பில் வீடு, வீடாக பொலீஸ் தேடுதல் வேட்டை

கொழும்பு, ஏப். 18

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வீடு வீடாகச் சென்று தேடும் நடவடிக்கைகளில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தமது வீடுகளில் புதிதாகத் தங்கியிருப்பவர்கள் பற்றி அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் முறையிடும்படி வீடுகளின் உரிமையாளர்களுக்கு பொலீஸார் ஆலோசனை கூறியுள்ளனர்.

கொழும்பில் தங்கியிருக்கும் தீவிரவாத சந்தேகநபர்களைக் கண்டு பிடித்துக் கைது செய்யவே, இத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. [உ-எ]

## அரசின் பொருளாதாரத் தடை தெற்கு மக்களையே பாதித்துள்ளது

### தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 18

தமிழீழத்தின் மீது சிங்கள அரசு விதித்த பொருளாதாரத் தடை ஆரம்பத்தில் எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். ஆனால் காலப்போக்கில் அது தென்பகுதி மக்களையே பெரிதும் பாதித்தது.

— இவ்வாறு கூறினார் தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ரவி.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த புதனன்று கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால் உள்ள கலைவாணி விளையாட்டரங்கில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். அங்கு உரையாற்றுகையில் திரு. ரவி மேலும் கூறியதாவது:-

பெரும்பாலும் சிங்கள நாட்டில் உற்பத்தியாகும் மூன்றில் ஒன்று யாழ். குடாநாட்டிலேயே சந்தைப்படுத்தப்பட்டு வந்தன. பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதை அடுத்து இந்தப் பொருள்கள் தெற்கிலேயே தேங்கத் தொடங்கின; அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன

இவ்வேளை இங்கு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது; பல புதிய பொருள்கள் உற்பத்தியாகின; விவசாயம் பெருகியது. இதனைக் கண்ட சிங்கள அரசு விழித்துக் கொண்டது பொருளாதாரத் தடையை பகுதியாக நீக்கியது. தனது பகுதியில் சந்தைப்படுத்த முடியாமல் தேங்கிய சோப், இனிப்பு போன்றவற்றை இங்கு கொண்டு வர அனுமதி வழங்கியது

"கொழும்பிலிருந்து வரவழைக்கப்படும் பசளை, கிருமிநாசினி போன்றவை தடைப்பட்டமையினால் அவற்றுக்குப் பதிலாக மாற்றீடுகள் இங்கே கண்டு பிடிக்கப்பட்டன; பாரம்பரிய பயிர்களான குரக்கன், சாமை, வரகு, தினை போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றுக்கு நோய்களின் தாக்கம் குறைவு இதனால் உற்பத்தி அதிகரித்தது. எமது சுய தேவை பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளது. புதிய தொழில் நுட்பங்கள் கையாளப்படுகின்றன.

இந்த வருட ஆரம்பம் முதல் மரக்கறி வகைகளின் விலைகள் குறைந்துள்ளன. எமது மக்கள் தம்மிடம் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்யும் ஆற்றல், ஊக்கம் உண்டு என்பதை நிரூபித்துள்ளனர். நாம் அவர்களுக்கு தொடர்ந்து ஊக்கம், உற்சாகம் அளிக்க வேண்டும் என்றார்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், விவசாயப் பகுதி, சமநலச் சேவைப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர்கள் உட்படப் பலர் நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் வழங்கினார். [உ-5-154-69]

## எங்கள் அலுவல்களுக்காக அரசை நம்பும் நிலை மாறவேண்டும்

### புத்தாண்டு விழாவில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 18

எங்கள் அலுவல்களுக்கு அரசாங்கத்தை மட்டும் தனியே நம்பி இருக்க வேண்டாம். அந்த நிலை மாற வேண்டும். இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களை எங்களில் ஒருவராக நினைத்து உதவும் இயல்பு எங்கள் மத்தியில் வளர வேண்டும்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

நல்லூர் பிரதேச செயலகம் உதயன் — சஞ்சீவி நிறுவனத்தின் ஆதரவில் நடத்திய தமிழ்ப் புத்தாண்டு விழா கடந்த 14 ஆம் திகதி மாலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையிலேயே அரச அதிபர் மேற் கண்டவாறு கூறினார்.

நல்லூர் பிரதேச செயலரும், உதவி அரச அதிபருமான திரு ஆ. மகாலிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார். உதயன் — சஞ்சீவி நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன், யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

"பண்டு தொட்டு தமிழினம் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடி வருகிறது. அன்றைய விழாக்களில் தமிழர் கலாசாரத்தைப் பேணுவதற்கான நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருக்கும். இப்போதும் நாம் அவ்வழியையே பின்பற்றுகிறோம். இந்த ஆண்டில் இருள் நீங்கி கீர்த்தி ஓங்கட்டும்" — என்றும் அரச அதிபர் சொன்னார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் கூறியதாவது:

மலர்ந்த புத்தாண்டு நல்லதாக மலர்ந்துள்ளது. தென்பகுதிக்கு இன்று வானம் பொழிந்து பூமி நனைந்து புதுப்பொலிவு ஏற்பட்டுள்ளமையே சான்றாகும்.

பொருளை ஈட்டிச் சேமித்து தாம் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமே எமது மக்களில் பலருக்கு உண்டு. ஆனால் உதயன் — சஞ்சீவி நிறுவனத்தினர் சமூக, சமய, அறிவு வளர்ச்சிப் பணிகளுக்கு உதவி வருவது ஏனையோருக்கு நல்ல முன்மாதிரியாகும்

நல்லூர் பிரதேச செயலகத்தினர் இந்தப் புத்தாண்டு நிகழ்ச்சிகளை வருடாந்தம் நடத்தி வருவது குறித்தும் மகிழ்கிறோம். இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களை நெறிப்படுத்தும் வகையில் விழாக்கள் அமைய வேண்டும் — என்றார். ஆத்மஜோதி நா. முத்தையா பிரதான உரை நிகழ்த்துகையில் கூறியதாவது.

இந்து சமயத்தைப் பொறுத்த மட்டில் மதம் வேறு தர்மம் வேறென்பது அல்ல. மதம் என்பது தர்மம் தான். தர்மம் செய்வது, உதவி தேவைப்படுவனுக்கு உதவுவது கடவுளுக்குச் செய்யும் தொண்டுக்குச் சமமானது.

எப்போதும் இல்லாதவாறு தர்மம் அதிகமாகத் தேவைப்படும் காலம் இது — என்றார்

யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். கே. வேலாயுதம், உதயன் பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன் ஆகியோரும் உரையாற்றினர்

புத்தாண்டு விழாவை முன்விட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசில்களைப் பெற்றவர்களுக்கு திருமதி போகேஸ்வரி மாணிக்கவாசகர், திருமதி சரோஜினி தேவி வேலாயுதம், திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் பரிசில்களை வழங்கினார்கள். [அ-51]

கிளிநொச்சி

## பாலர் பாடசாலை மாணவருக்கு பால் வழங்குவதற்குத் திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட உள்ளது

சமீபத்தில் நடைபெற்ற கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் இது பற்றித் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அமிர்தலிங்கம், மிருகவைத்திய திருமதி சுப்பிரமணியம், திட்டமிடல் பணிப்பாளர் நாகேந்திரம், கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். [இ]

## நெடுந்தீவுத் தபால்களும் உடைக்கப்படுகின்றன

### அதன் பின்பே விநியோகம்

நெடுந்தீவு. ஏப். 18

நெடுந்தீவு தபாலகத்தில் போடப்படும் தபால்கள் அனைத்தும் புதன்கிழமைகளில் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு எடுத்துப் போகப்பட்டு அங்கு வைத்து ஈ. பி. டி. பி. உறுப்பினர்களால் உடைத்துப் பார்க்கப்படுகின்றன. அதன் பின்னரே வெள்ளிக்கிழமைகளில் அவை நயினா தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் அங்கிருந்து உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்கள, கூட்டுத்தாபன, தனியார் நிறுவன தொழிற்சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

★ ★ ★

முக்கியமான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக யாழ். கோட்டத்தில் உள்ள அதிபர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு சமூகம் தரும்படி யாழ். கல்விக்கோட்டத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டிருக்கிறார்

★ ★ ★

அன்னை பூபதியின் ஞாப

## உற்சவம்

யாழ்ப்பாணம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் [நாச்சிமார் கோவில்] இன்று சண்டேஸ்வரர் உற்சவம் நடைபெறுகிறது. அதனை ஒட்டி சிறப்பு நிகழ்ச்சியாக இன்று மாலை 7 மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (உ)

கார்த்தமாக நடைபெற்று வரும் நிகழ்ச்சித் தொடரில் இன்று உடுவில் வட்டவையில்— இணுவில் கந்தசுவாமி கோவிலில் — உண்ணாவிரதம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

★ ★ ★

அன்னை பூபதி நினைவாக அஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக் கூட்டத்துக்கு திரு. கா. மலரவன் தலைமை வகிப்பார்.

திவக கோட்டக் கல்வி அதிகாரி திரு சி. புலேந்திரன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, கொக்குவில் இந்து அதிபர் திரு. இ. மகேந்திரன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

நாட்டிய நாடகம், வில்லிசை போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-3)

★ ★ ★

அன்னை பூபதியின் உருவப் படத் திரைநீக்கமும், நினைவுக் கூட்டமும் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

## அறிவித்தல்

இன்று 18-04-92 நாச்சிமார் கோயில் வண்ணை ஸ்ரீ காமாட்சி தேவஸ்தானத்தில் சண்டேஸ்வரி உற்சவத்தை முன்னிட்டு மாலை 7 மணியளவில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திருவாளர் இ. ஜெயராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

— சண்டேஸ்வரி உபயகாரர்.

[20623]

## புதிய உயர் கல்லூரி

அன்னை பூபதி
திரு உருவப் படம் திரை நீக்கமும்
அன்னாரின் தியாக மரணத்தை
நினைவு கூரும் வகையில்

பொதுக் கூட்டம்

காலம்: 18 04–1992 பகல் 12 மணி

கூட்டம் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களின் தலைமையில் நடைபெறும்.

[சி-1925]

NEW SCIENCE ACADEMY
JAFFNA.

93 A/L

★ சனி, ஞாயிறு வகுப்புக்கள் ★

பொது இரசாயனம்
(General Chemistry)

திரு. மணியம் B. Sc.

ஆரம்பம்: 18 04-1992
சனி காலை 10 00 மணி

[சி-1892]

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 93/94
விஞ்ஞான வகுப்புக்கள்

ஆரம்பம்: 19-4-1992 ஞாயிறு 10-00 காலை

| | | |
|---|---|---|
| பௌதிகம் | — | விமல்ராஜ், யோகதாஸன் |
| இரசாயனம் | — | மணியம், சிவசோதி |
| விலங்கியல் | — | கெங்காதரன் |
| தாவரவியல் | — | பாலசுப்பிரமணியம் (சி-1928) |

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## அரசாங்கத்தின் நிதி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ கடும் வரட்சியால் ஏற்பட்டுள்ள கைத்தொழில், விவசாயத் துறைகள் பாதிப்புகள்—

இவ்வாறான காரணங்களால் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி தோன்றியிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சர்வதேச நாணய சபை, உலக வங்கி ஆகியன இலங்கைக்குத் தேவையான அளவு கடனை வழங்கியிருந்தன. ஆனால் அந்தக் கடனில் 75 சதவீதம் பண்டக் கடனாக வழங்கப்பட்டது. நுகர்ச்சிப் பொருள்களாகவும், வாகனங்கள், உபகரணங்கள் வகையாகவும் தற்சமயம் அந்த உதவிகள் வந்து சேர்ந்திருக்கின்றன.

அதனால் திறைசேரியில் நிதி வளம் மிக மோசமான அளவுக்கு வற்றியுள்ளது.

அதனால் திறைசேரி அரச செலவினங்களுக்குப் பெரும் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்திருக்கிறது

பொருள்களை இறக்குமதி செய்யும் ஒருவர் எல்: ஸி. [Letter of Credit] முறையின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்யும் போது –

பொருள்களின் பெறுமதிக்குரிய பணத்தை முன்னேற்பாடாகவே வங்கியில் வைப்புச் செய்யவேண்டும் என்பது நடைமுறை விதி.

இந்த விதியிலிருந்து ஆயுத இறக்குமதிக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆயுதங்கள் வந்து சேர்ந்ததும் திறைசேரி மூலம் பணம் கட்ட ஒழுங்காகியிருந்தது.

திறைசேரியில் போதிய பணம் இல்லாததால் படையினர் தருவித்த ஆயுதங்கள் பல வாரங்களாகத் துறைமுகத்தில் கிடந்து தேங்குகின்றன என்றும்—

அந்தளவுக்கு திறைசேரி வெறுமை அடைந்துவிட்டது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. [அ-3]

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்

A/L 94

★ பௌதிகம் ★
ஆசிரியர்
திரு. விமல்ராஜ்
(B Eng)

ஆரம்பம்: 19 – 4 – 92
ஞாயிறு 10. 00 A. M.

C/1929

★ பேரடெனியா ★
இன்ஸ்ரிரியூட்,
கொக்குவில்.

A/L கலை, வர்த்தகம்
94, 93 புதியபிரிவுகள்
ஆரம்பம்: 18-04-92
நேரம்: காலை 6. மணி

★ வர்த்தகமும் நிதியும்:
திரு. தேவா
★ கணக்கியல்:
திரு. யோகராஜா
★ பொருளியல்:
பிரபல ஆசிரியர்
★ இந்துநாகரிகம்
★ தமிழ்
திரு. பாலா
★ அளவையியல்:
திரு. சயந்தன்
★ வரலாறு:
செல்வி நாகராணி
★ அரசியல்:
திரு. அருந்தவராஜா

[20618]

புலமைப் பரிசில்
ஆண்டு-5 (1991)
பயிற்சிப் பரீட்சை
19-04-1992
ஞாயிறு
பிற்பகல் 1-00 மணிக்கு
இக் கல்வி
நிறுவனங்களில்
நடத்தப்படும்.

Bond
— யாழ்ப்பாணம்
Express
— இருபாலை
Selin
— கோப்பாய்
Pearl
— நீர்வேலி
Kugan
— ஆவரங்கால்
Satha Pons
— வடமராட்சி
Brilliant
— தென்மராட்சி
Vinyls
— சுன்னாகம்
Vinayahar
— ஆனைக்கோட்டை
Bitsmans
— மானிப்பாய்
Paarathy
— சித்தங்கேணி
National
— பண்டத்தரிப்பு

விவரங்களுக்கு:
BOND
யாழ்ப்பாணம்
(சி-1788)

## ஐ. நா...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆப்கான் தூதரகத்தில் உள்ளவர்களால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக இந்திய அரசுக்கு ஆப்கான் தூதர் அறிவித்தார் என்றும் —

அதனைத் தொடர்ந்தே ஜெனிவா உடன்படிக்கையின் கீழ், தூதருக்கு இந்திய அரசு பாதுகாப்பு வழங்கியுள்ளது என்றும் இந்திய அதிகாரி ஒருவர் சொன்னார்.

புதுடில்லி ஆப்கான் தூதரகத்தில் தூதருக்கும் இன்னொரு ஆப்கான் அதிகாரிக்கும் இடையே சண்டை இடம் பெற்றதாகவும் கூறப்பட்டது. [உ-எ-3]

## இரண்டாவது..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பரீட்சைகள் கடந்த முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெற்றன.

இரண்டாவது தொகுதிப் பரீட்சைகள் 20 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இரண்டாவது தொகுதி பரீட்சைக்கான வினாத்தாள்களே தற்போது எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

இப் பரீட்சைகள் முடிவுற்றதும், மே முதல் வாரத்தில் விடைத்தாள்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைக்கும் —

26ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கும் தொலைக் கல்விப் பரீட்சைக்கும் உரிய வினாத்தாள்களும் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. [உ-3]

## வடக்கில் நடக்கும் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப் 18

எழுது வினைஞர் அதிசிறப்பு வகுப்புக்கான பரீட்சை எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் —

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் —

சுகாதாரத் திணைக்களத்தின் துணை மருத்துவர் தரம் மற்றும் இடைமட்ட தொழில் நுட்பவியலாளர் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இரண்டு பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இப் பரீட்சைக்கான வினாத்தாள்களும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன. [உ-3]

## ஆப்கானில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சியைப் பொறுப்பேற்றிருக்கிறது.

ஆனால் தலைநகர் காபூலை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் பல்வேறு முஜாகுதீன் கெரிலா குழுக்களின் தலைவர்கள் இடைக்கால சபை தன்னுடைய ஆட்சிப் பொறுப்பைக் கைவிட்டு, ஆட்சியை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிவருகின்றன.

இன்னும் சில தினங்களில் தாம் காபூலைக் கைப்பற்றியதும் ஆட்சி தங்கள் வசம் வரும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

சகல தரப்பினரும் இடம் பெறும் அமைப்பு ஒன்றிடம் ஆட்சியை தற்காலிகமாக ஒப்படைக்கச் செய்யும் தனது யோசனைக்கு ஆப்கானின் வேறுபட்ட பல குழுக்களையும் இணங்க வைக்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறது. [உ-எ-3]

## சீ-நோர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சாலையில் கடமையாற்றிய ஊழியர்களின் சம்பளம் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விவகாரம் 1991 ஆம் ஆண்டு அக்டோபரில் தொழில் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இடைப்பட்ட காலத்துக்கு — 1990 செப்டம்பர் முதல் 1991 அக்டோபர் வரையான காலத்துக்கு — சம்பளம் வழங்கவே தற்போது இணக்கம் காணப்பட்டிருக்கிறது. [உ-3]

## மீண்டும் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகக் குறைந்த எண்ணிக்கையினரே தமிழ்ப் பகுதிகளில் உணவு முத்திரை பெறுகிறார்கள்.

இதேவேளை வரட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்ட 13 மாவட்டங்களில் யாழ்ப்பாணம் உட்பட பல தமிழ் மாவட்டங்கள் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [அ-எ]

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் நடேசு

யாழ் அரசடியைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் நடேசு 17-4-1992 இல் காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், இராசேந்திரம் [முன்னாள் இ போ.ச. கணக்காளர்], குகேந்திரம் [தெல்லிப்பளை கராஜ் உரிமையாளர்], தனேஸ்வரி, ரேங்கராசா [மெக்கானிக்], கமலாதேவி, கலாநிதி [கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை], சாமளேஸ்வரி [கிராமிய சுகாதார உதவியாளர், மல்லாகம்], ஜீவனராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, நகுலேஸ்வரி [யாழ் போதனா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்], அமிர்தலிங்கம் [காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன தொலைபேசி இயக்குநர்], செல்வராஜா [டிங்கர்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-4-1992 காலை 10-00 மணியளவில் மல்லாகம் தேவாலய வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் அலுக்கை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
ரேங்கராசா
[மகன்]

தேவாலய வீதி,
மல்லாகம்.
(20626)

## மரண அறிவித்தல்கள்

### குழந்தைவேலு கணேசபிள்ளை

பத்தமேனியைச் சேர்ந்த குழந்தைவேலு கணேசபிள்ளை [கணேசு] 17 – 4 – 92 இல் கொழும்பில் காலமானார். இவர் அச்சுவேலி கணேஸ் ஸ்ரோஸ் வர்த்தகர் ஆவார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பாமினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னம்மாவின் அன்பு மகனும், செல்வராசா, தவமணி, சச்சிதானந்தம், வீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசரத்தினம், நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் 18 – 4 – 92 காலை 10 மணியளவில் கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. க. இராசரத்தினம்
[மைத்துனர்]

[20628]

### பீற்றர் திசநாயகம்

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த திரு. செ. பீற்றர் திசநாயகம் நேற்றுக் காலமானார்.

இவர் திருமதி மரியதாசம்மாவின் [ஓய்வு பெற்ற ஆசிரியை] அன்புக் கணவரும், திருமதி றஜனி குகநாதனின் அன்புத் தந்தையும், திரு. G. G. குகவதனியின் [முன்னாள் உதவி ஆசிரியர், ஈழநாடு], அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான திரு. N S. தம்பையா, ஞானம்மா ஆகியோரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற திருமதி அக்னஸ் தம்பையாவின் வளர்ப்பு மகனும், அறோ, ஆன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
மனைவி

49A, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம்.
[4669]

### திருமதி பரமேஸ்வரி மாசிலாமணி

[மண்டைதீவு]

திருமதி பரமேஸ்வரி மாசிலாமணி 17-4-92 இல் காலமானார். அன்னார் புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும், மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், மாசிலாமணி [முன்னைநாள் மண்டைதீவு கிராமசபை அலுவலர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கருணாகரன், கிருபாகரன் [சுவிஸ்], பிரபாகரன் [யாழ். தொழில் நுட்பக்கல்லூரி], இராஜேஸ்வரி [ஆசிரியை மண்டைதீவு கார்த்திகேயன் வித்தியாசாலை] ஆகியோரின் அருமைத் தாயாரும், சோமசுந்தரம் [இளைப்பாறிய ஆசிரியர் 1 ஆம் வட்டாரம் புங்குடுதீவு], குணரெத்தினம் [இளைப்பாறிய எழுதுவினைஞர்], திருமதி இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியை], காலஞ்சென்ற அருள்பிரகாசம், காலஞ்சென்ற பராசக்தி சொர்ணலிங்கம் [பொலீஸ்], திருமதி தனலெட்சுமி வல்லிபுரம் [யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை], திருமதி சிவயோகம்மா கங்கைவேணியன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதிதில்லம்மா யோகலிங்கம் [மண்டைதீவு] ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் காலை 8.30 மணிக்கு இன்று சனிக்கிழமை [18-4 92] நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தெ. சிதம்பரகுமார்

55 ஏ, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
[20622]

### திரு. சின்னத்தம்பி ஜெய்சிங்

(Rtd. Director of Works Irrigation)

Rao Sahib சின்னத்தம்பி ஜெய்சிங் நேற்று 17 – 04 - 92 காலமானார். அன்னார் காலஞ்சென்ற Rao Sahib சின்னத்தம்பி - நகுலாம்பிகை தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு. திருமதி பொன்னம்பலத்தின் அருமை மருமகனும், பிரேமாவதி [லண்டன்], நித்தியவதி, ஜெயசீலன [சம்பியா], ரேணுகாவதி [லண்டன்] ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. மகேந்திரன் [வைத்திய கலாநிதி, லண்டன்], எலிஸபெத் [சம்பியா], திரு. பாஸ்கரன் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி ஜெயலஷ்மி திருநாவுக்கரசு, திருமதி சிவபாக்கியம் குமாரசுவாமி [ஓய்வுபெற்ற ஆசிரியை இராமநாதன் கல்லூரி], திரு. தியாகராசா [பணிப்பாளர், உடற்கல்வி, யாழ் பல்கலைக்கழகம்], காலஞ்சென்ற சிவப்பிரகாசம் [Textiles Technologist] ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு [வைத்திய கலாநிதி], காலஞ்சென்ற குமாரசுவாமி [முன்னைநாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி], திருமதி யசோதரா தியாகராசா [அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி], திருமதி குணம் சிவப்பிரகாசம் ஆகியோரின் அருமை மைத்துனரும், கீதாஞ்சலி [லண்டன்], ஸ்ரீராம் [லண்டன்], சிவராம் [லண்டன்], நகுலினி [மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], ஆனந்தகிருஷ்ணன் [சம்பியா], சனோஜ் [சம்பியா] டிலான் [லண்டன்] ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 18-4-92 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல. 18 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் இருந்து செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
T. ஜெகநாதன்

இல. 18, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[20617]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org